[1970 செப்டம்பர் 5

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை நகரசபையும்கூட இந்தக் கோரிக்கையை வலியுறுத்தி ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. இது குறித்து மத்திய அரசாங்கத்திற்கு நம்முடைய அரசாங்கம் எப்போது கடைசியாக கடிதம் எழுதியுள்ளது? மேலும் இந்த விஷயத்தில் அரசாங்கம் என்ன முயற்சி எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, கடைசியாக எழுதிய கடிதம் என்று குறிப்பிட விரும்பவில்லை. அண்மையில் 31–7–70-ல் கடிதம் எழுதப்பட்டது.

Production of Documentary films

* 232 Q.—THIRU N. S. V. CHITHAN: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government's Information Department is producing documentary films besides news reels; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: (அ) தயாரிக்கப்படுகின்றன.

(இ) திரைப்பட கல்லூரி மூலமாக வரலாற்றுப் படங்கள் தயாரிக்கப்படுகின்றன. 1967-ம் ஆண்டில் அம்மை நோய் பற்றிய படமும் 1969-ம் ஆண்டில் குழந்தை நலம் பற்றிய படமும் வரலாற்றுப் படங்களாக (Documentary films)முறையே ரூ. 15,000, ரூ. 14,700 செலவில் எடுக்கப்பட்டன. செய்திப் படங்களில் பகுதிகளாக கீழ்க்கண்ட வரலாற்றுப் படங்களும் 1968–69-ம் ஆண்டில் தயாரிக்கப்பட்டன.

1. தேடிவந்த செல்வம் (Raffle)
2. காந்தி நூற்றாண்டு விழா.
3. ஈடான உணவு (Wheat)
4. வளரும் செல்வங்கள் (Midday Meals Schemes)
5. அண்ணா இருக்கின்றார்.

மேற்கண்ட படங்களைத் தவிர கீழ்க்கண்ட படங்கள் தயாரிப்பு நிலையில் உள்ளன.

1. குடும்ப நலம்.
2. பொருட்காட்சி.
3. கடல் மீன்.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க மதுரை, தஞ்சை, திருச்சி போன்ற நகரங்களில் உள்ள கோயில்களைப் படம் எடுத்து, அதை வெளிநாடுகளுக்கு, வட மாநிலங்களுக்கு அனுப்பினால், அங்கிருந்து பயணிகள் அதிகம் பேர் வரக்கூடிய வாய்ப்பு இருப்பதால், தமிழக அரசுக்கு லாபம் அதிகம் வருகின்ற காரணத்தினால், இதுபற்றி அரசு யோசிக்க முயற்சிக்குமா?

1970 செப்டம்பர் 5]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்தக் கோவில்களெல்லாம், அணிமணிகளெல்லாம் வண்ணப்படங்களாக எடுக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் இரண்டொரு கோவில்கள் பாக்கி இருக்கின்றன. அவைகள் எடுக்கப்பட்ட பிறகு இந்தப் படங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர் சொன்ன யோசனையை பரிசீலனை செய்வதற்கு முயற்சிகள் எடுக்கப்படும்.

* 233 Q.—Thiru K. CHEEMAICHAMY : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Tamil Nadu Government propose to produce a film on the preparation of wheat products: and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) & (இ) தமிழக அரசு செய்தி படம் எண் 16 பஞ்ச நிவாரணமும் (Drought Relief) கோதுமை உணவு தயாரிப்பது எப்படி என்பது பற்றியும் சேர்த்து படம் எடுக்கப்பட்டு, 10–10–1969ல் வெளியிடப்பட்டுள்ளது.

திரு. கே. விநாயகம்: சார், நமது சர்க்கார் எடுக்கிற படங்கள், நியூஸ் ரீல் ஆயினும் சரி, அல்லது டாக்குமென்டரி பில்ம் ஆயினும் சரி இவைகள் எல்லாம் பெரும்பாலும் கட்சிப் பிரசாரப் படங்களாக இருக்கின்றன என்று பொதுமக்கள் சொல்கிறார்களே, இது உண்மையா? ஆகையால் இந்தப் படங்களை எடுப்பதற்கு எல்லாக் கட்சித் தலைவர் அவர்களையும் சேர்த்து ஒரு குழு அமைத்து அவர்களுடைய ஆலோசனையின் பேரில் இந்தப் படங்களை எடுக்கிற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறதா? அல்லது அரசாங்கமே முடிவு செய்கிறார்களா என்பதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அமைச்சர்களின் உருவங்கள் அதில் தெரிகிற காரணத்தாலே அது கட்சிப் பிரசாரம் ஆகாது. எந்தக் கட்சியின் அடிப்படையிலும் எடுக்கப்படவில்லை. எல்லாக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட பல்வேறு விழாக்கள் அந்தப் படங்கள் இன்றைய தினம் வெளியிடப்படுகின்றன. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. கோமதி சங்கர தீட்சிதர் அவர்களுடைய பிறந்த நாள் விழா படம் கூட வெளியிடப்பட்டிருக்கிறது. மற்றும் பல் வேறு கட்சித் தலைவர்கள் பிறந்த நாள் விழாக்கள் படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே தனிப்பட்ட முறையிலே எந்தக் கட்சியைச் சேர்ந்த படங்களும் எடுக்கப்படவில்லை. பொதுவாக அரசாங்கப் பணிகள் படங்களாக இருக்கிற காரணத்தால் அமைச்சர்களை அடிக்கடிப் பார்க்க நேரிடுகிற காரணத்தால் ஒரு வேளை விநாயகம் அவர்களுக்குக் கட்சிப் பிரசாரமாக தெரிகிறது என்று கருதுகிறேன்.

தமிழ்நாட்டில் இந்திய தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள்.

* 234 வினா—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அகில இந்தியத் தேர்தல் கமிஷனால் அங்கீகரிக்கப்பட்ட தமிழகத்தில் உள்ள அரசியல் கட்சிகள் எவை எவை ?